9th March 1963]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கூட்டம் நடைபெற்ற இடத்தில் போலீஸ் அதிகாரிகள் இருந்தார்களா ? அப்படி இருந்திருந்தால், முடிவு செய்யப் பட்ட உடனே அவர்கள் ஏன் அதைத் தடுக்க முன்வரவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸ்காரர்கள் சட்டப்படியும், உத்தரவுப்படியும்தான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். உத்தரவு இல்லாமல் புதிதாக ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுக்கமாட்டார்கள்.

திரு. கோ. சி. மணி : அதைப் புதைத்ததற்குப் பிறகாவது உத்தரவு பெற்று, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டப்படி யார் குற்றம் செய்திருந் தாலும், நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இதற்குமுன் இவ்வாறு அசம்பாவித மான சம்பவங்கள் ஏற்பட்டு, அதற்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதே மாதிரி சம்பவம் நடந்தது என்று நான் கூற முடியாது.

Forest resources

* 166 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any scheme for undertaking a pre-investment survey of forest resources with a view to assessing the potentialities of forest in relation to further planning and development of integrated forest industries; and

(*b*) if so, the grant obtained therefor?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ)—ஆம். மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்படி ஒரு திட்டம் தயாரித்து அந்த அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவர்களுடைய ஒப்புதலுக்குப் பின்புதான், அவர்கள் கொடுக்கும் மானியம் எவ்வளவு என்பது தெரியும்.

Tuticorin Port

* 167 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the decisions taken at the meeting which the Secretary of Union Ministry of Transport and Communication had with the State Officials and Hon. Chief Minister in connection with the development of Tuticorin as a Major all-weather port?

The Hon. Sri V. RAMAIAH : A paper [a] is placed on the table of the House.

திரு. கே. ஏ. மதியழகன் : கண்ட்லா துறைமுகத்தை சுங்க வரி இல்லாத துறைமுகமாகச் செய்திருப்பது போல் தூத்துக்குடித் துறை முகத்தையும் செய்வதற்கு நம்முடைய சர்க்கார் யோசனை கூறினார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் இந்த அறிக் கையைப் படிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எழுப்பியுள்ள மூல கேள்விக்கும், இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

---

[a] Printed as Appendix on page 413.